# மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
# Mount Druitt Tamil Study Centre

Mobile: 0449 892 066 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au


## பேச்சுப் போட்டி 2022

## ஆண்டு 9/10

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

அனைவருக்கும் வணக்கம் !

இன்றைய எனது தலைப்பு

### நேரம் பொன் போன்றது

மக்களின் தேவைகளில் நேரம் மிக முக்கியமானது. தன் பயனையும் அவசியத்தையும் அனைவரும் உணர்ந்து செயலாற்றினால் வாழ்க்கையில் உயர்வும் வெற்றியும் அடைவது உறுதிதனையே திருவள்ளுவர்–

"ஞாலம் கருதினுங் கைகூடும் காலம்
கருதி ,டத்தாற் செயின்" என்று எடுத்துரைக்கின்றார்.

நேரத்தை சரியாக பயன்படுத்தியவர்களில் பலர் சாதனையாளர்களாக திகழ்கிறார்கள். "நேரம் பொன் போன்றது", "காலம் பொன்னானது" என தமிழர்கள் கூறுகின்றனர். எவ்வாறு அனைத்து இனத்தவர்களும் தங்கள் பொன்மொழிகள் மூலம் நேரத்தின் பயனை தெளிவுபடுத்துகின்றனர்.

"உங்களுக்கு கொடுக்கப்பட்ட ஒரே செல்வம் நேரமாகும். இதனை மற்றவர்கள் தங்களது நலத்திற்காகப் பயன்படுத்திக்கொள்ள அனுமதித்து ஏமாந்து விடாதீர்கள்" என்கிறார் அமெரிக்க எழுத்தாளர் கார்ல் சான்ட்பார்க்.



ஒரு வருடம், ஒரு மாதம், ஒரு வாரம், ஒரு நாள், ஒரு மணி நேரம், ஒரு நிமிடம், ஒரு வினாடி, ஒரு மில்லி வினாடி என பல வகைகளில் நேரத்தின் பயனை கணித்து அளவிடலாம்.

ஒரு வருடத்தின் பயனை இறுதிப் பரீட்சையில் தேர்ச்சியடைந்த மாணவனிடமும் ஒரு மாதத்தின் பயனை முன்கூட்டியே பிறந்த குழந்தையின் தாயிடமும் இவ்வாறாக நேரத்தின் பயனை நாம் கேட்டு அறியலாம்.

சிறுவயதில் இருந்தே கல்வி, விளையாட்டு முதலாக, அனைத்து செயற்பாடுகளில் நாம் நேரத்தை சரியாக பயன்படுத்தினால் நல்ல வாழ்க்கை அமையும். எனவே மாணவர்களாகிய நாங்கள் "நேரம் பொன் போன்றது" என்பதை உணரந்து செயற்படுவோமாக.....

நன்றி,
வணக்கம்.

ஆக்கம்: ஆசிரியர் திருமதி. இராஜேஸ்வரி குலவீரசிங்கம்.

பேச்சுப் போட்டி எதிர்வரும் 28.05.2022 அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.

"கல்லைப் பிசைந்து கனியாக்கும் செந்தமிழ் நந்தமிழ்"